# ஸ்ரீ ராஜ ராஜன் பொறியியல் கல்லூரி ஆண்டு விழா

இடம்:அமராவதிபுதூர்

தேதி:08/05/2022

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் உள்ள ஸ்ரீ ராஜ ராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் பன்னிரெண்டாவது ஆண்டுவிழா, விளையாட்டு தினவிழா மற்றும் விருது வழங்கும் விழா 07/05/2022 அன்று வெகு விமர்சியாக கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ ராஜ ராஜன் பொறியியல் கல்லூரியின் டீன் முனைவர்.கே.செந்தாமரை அவர்கள் வரவேற்புரை நல்கினார். துணை முதல்வர் திரு.v.மகாலிங்க சுரேஷ் அவர்கள் ஆண்டறிக்கையை வாசித்தார்.

ஸ்ரீ ராஜ ராஜன் கல்விக்குழுமத்தின் ஆலோசகர் மற்றும் அழகப்பா பல்கலைக்கழகத்தின் மேனாள் துணை வேந்தர் முனைவர்.s.சுப்பையா அவர்கள் தலைமை வகித்து விழாவினை இனிதே துவக்கி வைத்தார். அப்போது அவர்கள் தம் தலைமை உரையில் மாணவர்களை ஊக்கப்படுத்த ஆண்டுதோறும் விளையாட்டுவிழா மற்றும் ஆண்டுவிழா நடத்தப்படுகிறது என்றும் அண்ணா பல்கலை தரவரிசைப் பட்டியலில் 14 ராஜ ராஜன் பொறியியல் கல்லூரி மாணவர்கள் இடம்பிடித்துள்ளனர் எனவும் கல்வியில் மட்டுமல்லாமல் விளையாட்டிலும் தேசிய மற்றும் மாநில அளவில் பல மாணவர்கள் சாதனை படைத்துவருகின்றனர் எனவும் கூறினார்.

ஆகவே மாணவர்களை அவர்களின் திறமைக்கேற்ற பாதையில் வழிநடத்துவதே ராஜ ராஜன் பொறியியல் கல்லூரியின் நோக்கம் என்றும் தனது உரையில் தெரிவித்தார்.

விழாவிற்கு தலைமை விருந்தினராக கலந்துகொண்ட பேராசிரியர்,பேச்சாளர் மற்றும் நடிகர்,கலைமாமணி முனைவர்,G .ஞான சம்பந்தம் பங்கேற்று பேசுகையில் கல்விதான் தன்னை உயர்விற்கு கொண்டு சென்றது என்றும் ராஜ ராஜன் கல்லூரி மாணவர்கள் புதுப் புது முயற்சிகளில் சாதனை படைக்கிறார்கள் எனப் பாராட்டினார். "பசித்திரு,தனித்திரு,விழித்திரு" என்ற வார்த்தைக்கினங்க மாணவர்கள் அறிவுப் பசியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ,தனித்திறமையை வைத்திருக்க வேண்டும் என்றும் மற்றும் கிடைத்த வாய்ப்புகளை பயன்படுத்த வேண்டும் எனவும் தனது பொன்னான நகைச்சுவை பேச்சால் ஊக்கப்படுத்தினார்.

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட தேவகோட்டை வருவாய் கோட்ட அலுவலர் திரு.S .பிரபாகரன் மாணவர்களின் முன்னேற்றத்திற்கான பாதையை விரிவாக எடுத்துரைத்தார். பொறியியல்

மாணவர்களுக்கான போட்டித் தேர்வுகள் மற்றும் வேலை வாய்ப்பிற்கான வழிகாட்டுதல்களை தனது உரையில் வழங்கினார். சிறப்பு விருந்தினர் கல்லூரி ஆண்டு மலரை வெளியிட்டு சிறப்பு செய்தார்

விருது வழங்கும் விழா மதியம் நடைபெற்றது.விழாவில் தலைமை விருந்தினராக கவிஞர்.தங்கம்மூர்த்தி அவர்கள் சாதனைப் படைத்த மாணவர்களுக்கு விருதுகளும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கி பாராட்டினார். விருதுகள் வழங்கி பேசுகையில் அனைத்து மாணவர்களிடமும் திறமைகள் புதைந்து கிடக்கிறது திறமைகளை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

கௌரவ விருந்தினராக கலந்துகொண்ட பேராசிரியர் அய்யாவு அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது திருமதி. ராஜேஸ்வரி அவர்கள் நன்றியுரை நல்க விழா இனிதே நிறைவுபெற்றது.